**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.190/2023**
**வழக்கு சாட்சி P.W.2**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கார்த்திகேயன் | தொழில் | : விவசாய வேலை |
| தகப்பனார் பெயர் | : பழனிச்சாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : தாசரிபட்டி | வயது | : சுமார் 37 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 27.01.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க 1-ம் வாதி பழனிச்சாமி தான் என்னை அழைத்தார் என்றால் ? சரிதான். வாதிகள் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? அது பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. தாவா சொத்தின் சர்வே எண், மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் ? சரியல்ல. தெரியும். கொத்தையம் கிராமத்தில் உழவு செய்ய சென்றதால் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தார்கள் என்றால் ? சரிதான். வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும், என்ன பிரச்சனை, என்ன வழக்கு என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் ? சொத்து பிரச்சனை என்று சொன்னார்கள். வழக்கு பற்றி எதுவும் தெரியாமல் வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.01.27 10:57:51 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.190/2023**
**வழக்கு சாட்சி P.W.3**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பூபதிசண்முகம் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : சுப்பிரமணியகவுண்டர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : கொத்தையம் | வயது | : சுமார் 57 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 27.01.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>

1-ம் பிரதிவாதி பழனிச்சாமி அழைத்ததன் பேரில் நான் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ? சரிதான். வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் ? சொத்து பிரச்சனைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் ? சர்வே எண் தெரியாது. விஸ்தீரணம் தெரியும். 10 குழி நிலம் உள்ளது. சர்வே எண்களை பொறுத்து பத்திரத்தை பார்க்கவேண்டும். 10 குழி நிலமானது எந்த கிராமத்தில் உள்ளது என்றால் ? கொத்தையம் கிராமத்தில் 10 குழி நிலம் உள்ளது. கள்ளிமந்தையம் கிராமத்தில் 2 ஏக்கர் 60 செண்ட் பூமி உள்ளது. வெடிக்காரன்வலசு கிராமத்தில் 10 குழி நிலம் உள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும், தாவா சொத்து உள்ள இடம் எனக்கு தெரியாது என்றாலும் ? சரியல்ல. தாவா 2 இலக்க சொத்தான சர்வே எண்.1066/1A 1 ஏக்கர் 7 செண்ட் நிலம் மற்றும் சர்வே எண்.1066/1D 30 செண்ட் நிலத்தில் 3-ல் 1 பங்கு நிலமானது 2-ம் பிரதிவாதிக்கு கிரைய வழியில் பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? சரியல்ல. சர்வே எண்.887/1A கொத்தையம் கிராமத்தில் உள்ள 6 ஏக்கர் நிலமானது கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு அவரது தாயார்

செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்ததன் வழியாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் ? அந்த விபரம் எனக்கு தெரியும். ஏற்கனவே பாத்தியப்படவில்லை. பழனிச்சாமி என்பவரின் அண்ணன் சுந்தரமூர்த்தி இறந்த பிறகு பாத்தியப்படுத்திவிட்டார்கள். சுந்தரமூர்த்தி இறந்த பிறகு அவரது ஒரே வாரிசான 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 1–ம் பிரதிவாதியால், 2–ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் வழியாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் ? அவர்களுக்குள்ளாகவே எழுதிக் கொண்டார்கள். வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாமல் வாதிகளுக்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.01.27 17:57:57 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்